**மத்துகம பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 யூலை 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 34,0000,000 ஏனைய வருவாயின் கீழ் காட்டப்படாது சேவைக் கட்டணமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் முற்கொடுப்பனவு மீதியினுள் அடங்கிய முன்னைய ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்படாத பெருமளவு சதவீதமான தொகை அறவிடப்பட்டிருந்தபோதும், அவை கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கையில் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) முதலீட்டின் ரூபா 10,620,968 அதிகரிப்பானது முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படாது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) வருவாய்க் கடன்பட்டோரில் ரூபா 48,754,539 அதிகரிப்பு ஏற்பட்டபோதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 53,630,146 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) அறவிடப்படக்கூடிய பயன்பாட்டுச் சேவை அதிகரிப்பாகிய ரூபா 2,875,606 காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 290,316,750 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

---------------------------------

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,137,349 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 14,075,479 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 1,938,130 பின்னடைவு தென்பட்டது.

## 2. வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 15,073 | 12,439 | 4,725 |
| (ii) | குத்தகை வாடகை | 5,396 | 4,949 | 636 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 267 | 267 | - |

### 2.2 தீர்வையும் வரியும்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 5,473,544 ஆகிய தீர்வை வரி மீதியில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 சதவீதமான ரூபா 3,406,340 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மத்துகம உப அலுவலகத்தின் ரூபா 5,000 க்கு மேற்பட்ட 42 கூறுகளில் ரூபா 414,098 மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வர்த்தக நிலைய வாடகை

பொதுச் சந்தையில் உள்ள 55 ஆம் இலக்கக் கடையினது ரூபா 72,600 நிலுவையானது அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| | | ------------- |
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 18,500,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 60,994,435 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

------------------------------------------------------------------------------

(அ) 2015, 2016 ஆம் ஆண்டுகளில் சபைக்குச் சொந்தமான 09 காணிகளது நில அளவைக்காக ரூபா 323,259 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், 05 மயானங்களில் மாத்திரம் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) கிராமச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 1976 செப்டம்பர் 27 ஆந் திகதியன்று மத்துகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 02 ஏக்கர், 33 பர்ச்சஸ் விசாலமான வெல்கந்தல கெட்டேலந்த மயான பூமியை 06 தனி நபர்கள் அத்துமீறியவாறு பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தியமையால் தென் மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுத் குழுவினால் 2016 மே 24 ஆந் திகதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அங்கு வெளியிடப்பட்டவற்றின் மூலம் அங்கு 50 ஆண்டுகாலமாகப் பயிர்ச் செய்கை நடைபெற்றவாறிருப்பது அவதானிக்கப்பட்டதுடன், சபையின் சொத்துக்களைப் பிரதேச சபை முறையாகப் பாதுகாக்காமையால் இந்நிலை உருவாகியது தெரிய வந்தது.

(இ) மத்துகம பிரதேச சபையினது மயானங்கள் பதிவேட்டின்படி 52 மயானங்கள் உள்ளதுடன் அதில் 31 மயான பூமிகள் ஒப்படைப்புக் கட்டளைகள் மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ளபோதும், அவற்றுள் 16 இற்றை வரை ஒப்படைப்புக் கட்டளையின்றி இருப்பதும் எஞ்சிய 21 க்கும் ஒப்படைப்புக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருப்பதும் தெரிய வந்தது.

(ஈ) ஏல விற்பனைகளின்போது பொது நடவடிக்கைகளுக்கெனப் பெறப்பட்ட 2 காணித்துண்டுகளுக்குரிய நில அளவைப் பத்திரங்கள் சபையில் இருக்கவில்லை.

(உ) நூலகத்தின் வாசிப்புக் கூடத்தைப் புதுபிப்பிக்கும்போது அகற்றப்பட்ட 65 இரும்புத் துண்டுகள் களஞ்சிய உத்தியோகத்தரால் முறைப்படி பொறுப்பேற்கப்பட்டிருந்தபோதும், முறைப்படி விநியோகங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) கடைகளுக்கான உடன்படிக்கையில் ஈடுபடுதல்

---------------------------------------------------------------------------------

மத்துகம உப அலுவலகத்திற்குச் சொந்தமான 10 ஆம் இலக்க மீன் விற்பனைக் கூடம், 07 ஆம் இலக்க பொது விற்பனைக் கூடம் மற்றும் வெலிபென்ன உப அலுவலகத்திற்குரிய புதிய சந்தையிலுள்ள 05 விற்பனைக் கூடங்கள் மற்றும் பொதுச் சந்தையில் உள்ள 04 கடைகள் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படவில்லை.

(எ) கடைகளை வாடகைக்கு வழங்குதல்

-----------------------------------------------------------------

(i) மத்துகம உப அலுவலகத்திற்குரிய 43A இலக்கக் கடை சபையால் செலவுகள் மேற்கொள்ளப்படும் அடிப்படையில் குத்தகையாளரால் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன், குத்தகையாளர் கடை வாடகையில் அதனைக் கழித்துக் கொள்வதற்கான இணக்கம் காணப்பட்டுமிருந்தது.

- செலவை நிச்சயித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 2015 மார்ச் முதல் இற்றை வரை 2 மாத வாடகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) இக்கடைகள் அமைந்துள்ள காணி சபைக்குரியதல்ல. அது பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு உரியதாகும். இதனைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

(iii) இக்குத்தகையாளருக்கே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 33 ஆம் இலக்கக் கடையானது வீதியை விசாலமானதாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அச்சந்தர்ப்பத்தில் மூடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டிருந்த 60 ஆம் இலக்கக் கடை குத்தகையாளருக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2016 செப்டம்பர் 30 வரை உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) மத்துகம உப அலுவலகத்தால் கடைகள் வாடகைக்கு வழங்கப்படுதல்

---

(i) உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 32 ஆம் இலக்கக் கடையின் பொருட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) மீன் விற்பனைக் கூடம் இலக்கம் 8 க்குரிய கடையினது குத்தகை உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்குக் குத்தகையாளர் சமூகமளிக்காததால் சபை அதனைச் சுவீகரித்தபோதும், மீண்டும் கேள்விகளைக் கோரவில்லை.

**3.2 இழப்புகளும் நட்டங்களும்**

---

சபைக்குச் சொந்தமான 142 ஜீஐ குழாய்கள் தொலைந்து போயின. இது தொடர்பாக 2015 டிசெம்பர் 28 அன்று பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை வழங்குமாறு 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியன்று சபையின் செயலாளர் விசாரணை உத்தியோகத்தர்களைக் கோரியிருந்தார். விசாரணை உத்தியோகத்தர்களது விசாரணை அறிக்கையின் பிரகாரம் அவ்விழப்பை முன்னாள் சபைத் தலைவரிடமிருந்து அறவிட வேண்டுமெனத் தீர்மானித்திருந்தபோதும், அவ்விழப்பைக் கணித்து அறவீட்டை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**3.3 செயலாற்றல்**

---

2016 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 36 வேலைகளைச் சபை நிறைவேற்ற வேண்டியபோதும், 10 வேலைகளே நிறைவேற்றப்பட்டிருந்தன. மேலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத 32 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு